# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

<u>ஆணை எண்.102/மா/2024</u>
<u>நாள் 08. 10.2025</u>

திரு. G. தேவா
சென்னை — முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர்
மண்டலம் 9
பெருநகர சென்னை மாநகராட்சி
(2) உரிமையாளர்
Ibaco Ice Cream Parlour
சென்னை — எதிர் மனுதாரர்கள்

சென்னை–600026, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, கதவு எண் 1, பிளாசா மேனர் பிளாட், C.50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் 03.11.2023 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 06.11.2023 அன்று பெறப்பட்டு 102/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

சென்னை–600026, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, கதவு எண் 1, பிளாசா மேனர் பிளாட், C.50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவர் தனது 03.11.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 23.07.2023 அன்று கதவு எண் 140, ஹபிபுல்லா சாலை, தி. நகர், சென்னை–600 017, என்கின்ற முகவரியில் தரை தளத்தில் உள்ள Ibaco Ice Cream Parlour–ல் Ice Cream சாப்பிட சென்றேன். இந்த கட்டிடத்தின் தரை தளத்தில் வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஒதுக்கிய இடத்தில் 5 பெட்டி கடைகளை போல் அமைத்து Gas Cylinder பற்ற வைத்து விதிமுறைகளை மீறி உணவகம் நடத்தி வருகிறார்கள். சாப்பிட வருபவர்கள் வாகனங்களை சாலையில் உள்ள நடைபாதையில் நிறுத்த வேண்டும் என்கிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி நடைபாதை நடப்பதற்கே என்று நடைபாதையில் விளம்பர பலகை நட்டு வைக்கிறார்கள். ஆனால் கட்டிட உரிமையாளர் வாகனம் நிறுத்தும் இடத்தையும் வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கிறார்.

இது சம்பந்தமாக பொது அதிகார அமைப்பில் உள்ள 6 நபர்களுக்கு 28.07.2023 அன்று புகார் மனு அனுப்பினேன். இன்று வரை வாகனம் நிறுத்தும் இடத்தில் இருந்து ஒரு கடையையும் பெருநகர சென்னை மாநகராட்சி அகற்றவில்லை.

நடைபாதை ஆக்கிரமிப்பு, சாலையில் நடந்து செல்லும் போது மக்கள் சில நேரங்களில் வாகன விபத்துகளில் சிக்குவதும், அதனால் உயிர் சேதமும் ஏற்படுகிறது. நடைபாதை என்று பெயர் வைப்பதற்கு பதில் "நடைபாதை எனும் வாகனம் நிறுத்துமிடம்" என்று தான் பெயர் பலகை வைக்க வேண்டும் என்று பாதசாரிகள் புலம்பும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

ஆகையால், ஐயா அவர்கள் மேற்கண்ட அடுக்குமாடி வணிக வளாகத்தின் தரை தளத்தில் வாகனம் நிறுத்தும் இடத்தில் விதி முறைகளை மீறி செயல்படும் 5 உணவகங்களையும் உடனே அகற்றி வாகனம் நிறுத்தும் இடமாக மாற்றி நடைபாதையில் நடப்பவர்கள் நிம்மதியாக நடக்க வழி செய்யுமாறும், இது வரை எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9–ன் செயற் பொறியாளர், பகுதி–26–ன் உதவி செயற்பொறியாளர், மற்றும் 113–வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.12.2023 நாளிட்ட கடிதம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளரிடமும் மற்றும் 16.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடமும் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் செயற்பொறியாளர் தனது 17.02.2024 நாளிட்ட கடிதம் ம.அ.9/ந.க. எண்.00342/2024–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

> "மனுதாரர் புகார் மனு குறித்து, மண்டலம் 9, பகுதி–26, கோட்டம் 113, ஹபிபுல்லா சாலையில் உள்ள "IBACO" எண் 140, சென்னை–600 017 உள்ள நடைபாதை ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்பதினை தெரிவித்துக் கொள்கிறோம்." என தெரிவித்துள்ளார்.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலர் தனது 19.08.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

> "மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள கோட்டம் 113–ல் தி. நகர் பகுதிக்குட்பட்ட ஹபிபுல்லா சாலையில் அமைந்துள்ள கதவு எண் 140ல் இயங்கும் IBACO Ice Cream Parlour என்ற தனியார் கட்டிடத்தின் தரை தளத்தில் வாகனம் நிறுத்துமிடத்தில் விதிகளை மீறி உணவகம் அமைந்துள்ள கட்டிடம் முறையே கட்டிட அனுமதி பெற்றுள்ளதா ? என அறிய Form 1 தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆவணங்கள் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

5. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.08.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 20.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"சென்னை 17 தி. நகர், ஹபிபுல்லா சாலை கதவு எண் 140 என்கின்ற முகவரியில் தரை தளத்தில் உள்ள Ibaco Ice Cream Parlour–ல் Ice Cream சாப்பிட சென்றேன். இந்த கட்டிடத்தின் தரை தளத்தில் வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஒதுக்கிய இடத்தில் 5 பெட்டி கடைகளை அமைத்து Gas Cylinder-களை வைத்து விதிமுறைகளை மீறி உணவகம் நடத்தி வருகிறார்கள். சாப்பிட வருபவர்கள் வாகனங்களை சாலையில் உள்ள நடை பாதையில் நிறுத்த வேண்டும் என்கிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி நடைபாதை நடப்பதற்கே என்று நடைபாதையில் விளம்பர பலகை வைக்கிறார்கள். ஆனால் கட்டிட உரிமையாளர் வாகனம் நிறுத்தும் இடத்தையும் வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கிறார்.

இது சம்பந்தமாக 28.07.2023 அன்று புகார் மனு அனுப்பினேன். இன்று வரை வாகனம் நிறுத்தும் இடத்தில் இருந்து எந்தவொரு கடையும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9ன் அலுவலர்களால் அகற்றப்படவில்லை.

எனவே மேற்கண்ட அடுக்குமாடி வணிக வளாகத்தின் தரை தளத்தில் வாகனம் நிறுத்தும் இடத்தில் விதி முறைகளை மீறி செயல்படும் 5 உணவகங்களையும் உடனே அகற்றி வாகனம் நிறுத்தும் இடமாக மாற்றி நடைபாதையில் நடப்பவர்கள் நிம்மதியாக நடக்க வழி செய்யுமாறும், இது வரை எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

7. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் 20.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் தெரிவித்துள்ள புகார் குறித்து உரிய கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. களஆய்வில் மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, சென்னை–600 017 ஹபிபுல்லா சாலை எண் 140ல் இயங்கும் IBACO Ice Cream Parlour வளாகத்திற்குள் தள்ளுவண்டிகள் கடை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது அகற்றப்பட்டது. ஆனால் மீண்டும் உரிமையாளரால் தள்ளுவண்டிகள் கடை வைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள கட்டிடம், கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து கட்டிட உரிமையாளருக்கு under section 56 or 57 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)–ன்படி தாக்கீது Form-I வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளரிடமிருந்து பதில் பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்."

8. மற்றொரு எதிர்மனுதாரரான IBACO Ice Cream Parlour உள்ள கட்டிடத்தின் உரிமையாளர் திரு. ந. கமலக்கண்ணன் மற்றும் அவரது சார்பாக, வழக்கறிஞர் திருமதி நா. சிந்துஜா ஆகியோர் 20.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, தி. நகர் ஹபிபுல்லா சாலை, கதவு எண் 140–ல் உள்ள கட்டிடம் கமலக்கண்ணன் என்ற எதிர்மனுதாரராகிய எனக்கு சொந்தமான கட்டிடம். இக்கட்டிடத்தின் தரை தளத்தில் IBACO Ice Cream Parlour நடத்திட வாடகைக்கு விட்டுள்ளேன். அக்கடையில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை. மாறாக நடமாடும் தள்ளுவண்டி கடைகள் குறிப்பிட்ட நேரத்தில் தற்காலிகமாக செயல்படும். அங்கு நிரந்தமான கடைகள் ஏதுமில்லை. ஆதலால் போக்குவரத்து நெரிசல் ஏதுமில்லை.

மேற்கண்ட கட்டிடத்தின் தரை தளத்தில் போதிய பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் தெரிவித்தவாறு எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லையென்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

9. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான Ibaco Ice Cream Parlour–ன் கட்டிட உரிமையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

"சென்னை 17 தி. நகர், ஹபிபுல்லா சாலை கதவு எண் 140 என்கின்ற முகவரியில் தரை தளத்தில் Ibaco Ice Cream Parlour–ல் இயங்கும் கட்டிடத்தில், வாகனம் நிறுத்துவதற்காக ஒதுக்கிய இடத்தில் 5 பெட்டி கடைகளை அமைத்து விதிமுறைகளை மீறி உணவகம் நடத்தி வருவதால், அங்கு சாப்பிட வருபவர்களின் வாகனங்கள் சாலையில் உள்ள நடை பாதையில் நிறுத்தப்படுகிறது என்பதும், கட்டிட உரிமையாளர் வாகனம் நிறுத்தும் இடத்தையும் வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கிறார் என்பதும், இது சம்பந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் மனு அளித்தும், இன்று வரை வாகனம் நிறுத்தும் இடத்தில் இருந்து எந்தவொரு கடையும் அகற்றப்படவில்லை என்பதும், விதி முறைகளை மீறி செயல்படும் 5 உணவகங்களையும் உடனே அகற்றி வாகனம் நிறுத்தும் இடமாக மாற்றவும், புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, சென்னை–600 017 ஹபிபுல்லா சாலை எண் 140ல் இயங்கும் IBACO Ice Cream Parlour வளாகத்திற்குள் களஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தள்ளுவண்டி கடைகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டவை அகற்றப்பட்டன என்பதும், ஆனால் மீண்டும் உரிமையாளரால் தள்ளுவண்டிகள் கடை வைக்கப்பட்டுள்ளது என்பதும், எனவே, கட்டிடம், கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து கட்டிட உரிமையாளருக்கு under section 56 or 57 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)–ன்படி தாக்கீது Form-I வழங்கப்பட்டுள்ளது என்பதும், கட்டிட உரிமையாளரிடமிருந்து பதில் பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, தி. நகர் ஹபிபுல்லா சாலை, கதவு எண் 140–ல் உள்ள கட்டிடத்தின் உரிமையாளர் தனக்கு சொந்தமான கட்டிடத்தின் தரை தளத்தில் IBACO Ice Cream Parlour நடத்திட வாடகைக்கு விட்டுள்ளார் என்பதும், அக்கடையில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை என்பதும், மாறாக நடமாடும் தள்ளுவண்டி கடைகள் குறிப்பிட்ட நேரத்தில் தற்காலிகமாக செயல்படும் என்பதும், அங்கு நிரந்தமான கடைகள் ஏதுமில்லை என்பதும், ஆதலால் போக்குவரத்து நெரிசல் ஏதுமில்லை என்பதும், மேற்கண்ட கட்டிடத்தின் தரை தளத்தில் போதிய பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் தெரிவித்தவாறு எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்பதும் மற்றொரு எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் மற்றும் அவரது சார்பாக விசாரணைக்கு ஆஜரான வழக்கறிஞர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, சென்னை–600 017 ஹபிபுல்லா சாலை, எண்.140ல் IBACO Ice Cream Parlour இயங்கும் கட்டிடத்தின் தரைத் தளத்தில் பார்க்கிங் வசதி உள்ளதாகவும், மனுதாரர் தெரிவித்தவாறு ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை என்றும், மாறாக நடமாடும் தள்ளுவண்டி கடைகள் குறிப்பிட்ட நேரத்தில் தற்காலிகமாக செயல்படும் என்றும், அங்கு நிரந்தரமான கடைகள் ஏதுமில்லை என்றும், ஆதலால் போக்குவரத்து நெரிசல் ஏதுமில்லை என்றும் மற்றொரு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட வளாகத்திற்குள் மாநகராட்சியால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தள்ளுவண்டி கடைகள் அகற்றப்பட்டும், மீண்டும் உரிமையாளரால் தள்ளுவண்டி கடைகள் வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட கட்டிடம், கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து கட்டிட உரிமையாளருக்கு under section 56 or 57 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)-ன்படி தாக்கீது Form-1 வழங்கப்பட்டு, அது குறித்து பதில் பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சியால் தெரிவித்து இருந்தாலும், மேற்கண்ட கட்டடத்திற்கு உரிய கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது குறித்தும், The Tamil Nadu Combined Development and Building Rules, 2019, Part I, Annexure IV-ல் குறிப்பிட்டுள்ளவாறு போதிய பார்க்கிங் வசதி அளிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும், மேற்கண்ட கட்டிடத்தில் இயங்கும் தற்காலிக கடைகள் மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு அமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆய்ந்தறிந்து The Tamil Nadu Town and Country Planning Act, 1971–ன்படி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G. தேவா,
C-5, பிளாசா மேனர் பிளாட், எண் 1 கருமாரி அம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை–600 026.

(2) திரு. ந. கமலக்கண்ணன்,
கதவு எண் 140, ஹபிபுல்லா சாலை, தி.நகர்,சென்னை–600 017.

(3) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(4) மண்டல அலுவலர், மண்டலம் 9,
4, லேக் ஏரியா 4வது குறுக்கு தெரு, பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை–600 034.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இருப்புகோப்பு/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.